புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் வாழ்வியல் குறித்த நோக்கும் போக்கும்

**ஆய்வாளர்**
***மு. சரண்யா,***
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத் துறை,*
*அரசு கலைக் கல்லூரி, அரியலூர் – 621713.*

**நெறியாளர்**
***முனைவர் த.கார்த்திகேயன்,***
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழாய்வுத் துறை,*
*அரசு கலைக் கல்லூரி, அரியலூர் – 621713.*

**ஆய்வுச் சுருக்கம்**

*இலக்கியங்கள் மனித வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தோன்றுகின்றன. கால இயக்கத்தின் வேகத்திற்கேற்ப இலக்கியம் புதுவகையான வடிவங்களுடன் வளர்ச்சியடைதல் இயல்பான ஒன்றாகும். பல மாற்றங்களையும், புதுமைகளையும் பெற்றுள்ள இலக்கிய வடிவமான சிறுகதை இலக்கியம் தனக்கென நிலையான ஓர் இடத்தைப் பெற்றுள்ளது. மனித வாழ்வில் தோன்றும் இன்ப, துன்பங்களுக்கும், ஏற்றத்தாழ்வுகளுக்கும் காரணமாக உள்ளவற்றைக் களைய உரிய முயற்சிகள் காலந்தோறும் எழுந்த வண்ணம் உள்ளன. இதன் நோக்கம் மனித ஆற்றலை உணர்த்தி, அம்மனிதப் பண்பை உயர்த்துவதேயாகும். அவ்வகையில் பெண்ணிய எழுத்தாளரும் பெண்ணியவாதியுமான ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகளில் காணலாகும் வாழ்வியல் குறித்த பொருண்மைகளை நோக்கிப் பகுத்து அதன் போக்கினை இனம் காண்பதாக இவ்வாய்வு அமைகின்றது.*

**முன்னுரை**

காலங்கடந்தும் மனித வாழ்வியலை திறம்பட எடுத்துரைக்கும் கருவியாக இலக்கியங்கள் விளங்குகின்றன. இவ்விலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறைகளையும், சமூக அவலங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டு இயங்குகின்றன. படைப்பாளிகளும் தம் கற்பனைத் திறன் மூலம் இவற்றை உள்ளடக்கியே இலக்கியங்களைப் படைக்கின்றனர். அவ்வகையில் ஆண்டாள் பிரியதர்ஷினி சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் நிலைகளைத் தமது சிறுகதைகளில் பதிவு செய்துள்ளார். அச்சிறுகதைகளின் வழி சமுதாயத்தில் மக்கள் பின்பற்றி வரும் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்கு முறைகள், நம்பிக்கைகள், திருவிழாக்கள் போன்ற பண்பாட்டுக் கூறுகளை அறியமுடிகின்றது. இவை குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**வாழ்வியல் விளக்கம்**

மனித வாழ்க்கையின் நோக்கத்தையும், தன்மையையும் அதன் போக்கையும் பற்றி எடுத்துக் கூறுவதே வாழ்வியலாகும். “வாழ்வு + இயல்” என்பதே வாழ்வியலாயிற்று. வாழ்வு என்பது பிழைப்பு, வசித்தில், உறைவிடம், செல்வம் ஆகிய பொருளையும் இயல் என்பது ஒப்பு, தகுதி, தன்மை, ஒழுக்கம், நூல், செலவு, இயற்றமிழ், இலக்கியம், பெருமை, மாறுபாடு என்கிற பொருளையும் குறிக்கின்றது. இதன் வழி வாழும் இலக்கணம் அறிந்து அதற்கேற்ப வாழ்வதே வாழ்வியல் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. இவ்வுலகம் கோடிக்கணக்கான உயிர்களைத் தன்னகத்தே கொண்டதாக அமைந்துள்ளது. ஆதிகாலத்திலிருந்து மனிதனை வாழும் நியதிக்குள் பொருத்தி நோக்கும் பொழுது அவன் நாகரிகமற்றவனாகவே வாழ்ந்திருக்கின்றான் என்பதை அறியமுடிகின்றது.

இயற்கையை மட்டுமே சார்ந்து காட்டுக்குள் வாழ்ந்த மனிதன் இவ்வாறுதான் வாழவேண்டும் என்ற முறையிலிருந்து மாறி கட்டுப்பாடற்ற வாழ்க்கையை முதலில் வாழ்ந்து வந்தான். காடும் மலையும் மட்டுமே அறிந்த அவனுக்கு வாழ்க்கைத் தேவை குறைவாகவே இருந்தது. உணவு தேடுதல் மட்டுமே அவனது இன்றியமையாத குறிக்கோளாக இருந்தது. கால ஓட்டத்தினூடாக அவனது சிந்தனை சக்தி வளரத் தொடங்கியதால் விலங்குகளிடமிருந்து மேம்பட்ட வாழ்க்கை வாழவேண்டும் என்ற எண்ணம் அவனுக்குள் தோற்றம் பெற்றது. ஆதலால் அவன் தான் வாழும் வாழ்க்கையிலிருந்தே ஆசை, பொறுப்பு, தேவை, நிறைவு, ஒழுக்கம் போன்ற சிந்தனைகளை வளர்த்துக் கொண்டு அதற்கேற்றபடி வாழத்தொடங்கினான். இக்கருத்தை வலுவூட்டும் விதமாக,

“உணவு தேடுதல் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு விலங்கு வாழ்க்கை வாழ்ந்த மனிதன் விலங்குகளிடமிருந்து தான் மேம்பட்டவன் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பல பண்புகளைக் கடைபிடிக்கத் தொடங்கினான். அத்தகைய பண்புகளைச் சமுதாயத்தில் அனைவரும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்று வரைமுறைப்படுத்தினான்”[1] என்ற குறிப்பு அமைந்துள்ளது. தனி ஆளுமையாக வாழ்ந்த அவன் வாழ்வியலின் உண்மையை, நேர்த்தியை அறியத் தொடங்கியதும், இனக்குழு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தான். தங்கள்

*குழுவுக்கெனச் சில சட்டத்திடங்களையும் கட்டுப்பாடுகளையும் வகுத்துக்கொண்டு வாழத்தொடங்கினான். அவ்வாறு வாழத்தொடங்கியதன் காரணமாக இப்படித்தான் வாழ வேண்டும் என்னும் வாழ்க்கை முறை உருவானதை.*

*''மக்கள் கூட்டம் கூட்டமாக ஒன்று சேர்ந்து வாழும் போது தங்களுக்குள் சில கூட்டுத் திட்டங்களை உருவாக்கிக் கொண்டு பொருளாதார நிலைக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் தங்கள் வாழ்க்கை முறையை திட்டமிட்டோ அல்லது அங்குள்ளவர்கள் இப்படி வாழவேண்டும் திட்டமுறையிலோ வாழவேண்டியுள்ளது''*[2] என்ற குறிப்பு குறிப்பிடுகின்றது. தொல்காப்பியர் மக்களின் வாழ்க்கை திரிபின்றி வாழ்க்கையை இருக்க வேண்டுமென்பதை,

**"இருதிணை ஐம்பால் இயல்நெறி வாழா அமைத்**

**திரிவு இச்சொல்லொடு தழாஅல் வேண்டும்"**[3]

*என்ற நூற்பாவின் வழி சுட்டிக்காட்டுகின்றார். இலக்கியங்கள் யாவும் மக்களுக்குத் தேவையான வாழ்வியல் கருத்துக்களைத் தம் பாக்களின் வழியாக எடுத்தியும்புவனாக உள்ளன. அவ்வகையில் ஆண்டாள் பிரியதர்ஷினி தனது சிறுகதைகளில் கையாண்டுள்ள வாழ்வியல் குறித்த கருத்துக்களைப் பின்வருவனவற்றுள் காணலாம்.*

**சடங்குகள் குறித்த நோக்கும் போக்கும்**

*மனிதன் தன் பிறப்பிலிருந்து இறப்பு வரை சமூக விதிகளுக்கு உட்பட்ட பல செயல்களைத் தனியாகவோ அல்லது பிறருடன் இணைந்து கூட்டாகவோ செய்யும் போக்குடையவனாக இருந்து வருகின்றான். அதில் சடங்கானது முக்கியப் பங்கு வகுக்கின்றது. ''சடங்கு'' என்ற சொல்லிற்கான இலக்கணத்தை ''சடங்கு'' என்ற சொல்லிற்கு ''சட்ட'' என்ற உரிச்சொல் வேர்ச்சொல் ஆகும். சட்ட + அம் + கு = சடங்கு. ''சட்ட'' என்ற சொல்லிற்கு செம்மையான ஒழுங்கு முறையான என்ற பொருள். ''அம்'' சொல் அழகியது என்ற பொருள் உடையது. ''கு'' என்பது தன்மையைக் குறித்ததோர் விடுதி. பண்பு + அம் + கு = பாங்கு என்று ஆகியது போல சட்ட + அம் + கு = சடங்கு என்று ஆயிற்று'' என்று சி.புவியரசு, ''சித்தேரி பழங்குடி இனமக்களின் வரலாறும், வாழ்வியலும் (ப.64) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

*சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நிகழ்த்தப்படும் சடங்கு அவனது விருப்பத்தை மட்டுமின்றி சமூகத்தின் விருப்பத்தையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இச்சடங்கின் போக்கு சமூகம் சார்ந்த சொற்களைப் பிரதிபலிப்பதாய் உள்ளது. இதனை,*

*''சடங்குகள் சமூகச் சூழல்களில் நிகழத்தப்படுவது என்றும், சமூக நிகழ்வுகளாகவே அமைகின்றன என்பதும் சடங்கின் தொன்மையான தன்மைகள் – அதுமட்டுமல்லாமல் சடங்குகள் சமூகத்தின் விருப்பத்தினைத் தெரிவிப்பதாகவும் இந்த விருப்பம் கூட்டுமனம் சார்ந்ததாகவும் அமைகின்றன.''*[4] என்ற கூற்று உணர்த்திகின்றது. இதில் கூட்டு மனம் என்பது *சமூகத்தில் வாழும் ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பை அர்த்தப்படுத்துகின்றது. இச்சடங்கு இன்பம் சார்ந்த சடங்காகவோ துன்பம் சார்ந்த சடங்காகவோ அமையும். எச்சடங்காயினும் சடங்கு செய்பவன் விரும்பினாலும்*

விரும்பாவிட்டாலும் சமூக எல்லையை மீறாமல் செய்யவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. சடங்கு செய்பவர்கள் தனது வாழ்க்கையில் ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவோ அல்லது சடங்கினைச் செய்யாவிட்டால், தனக்கோ, தனது சந்ததியினருக்கோ ஏதேனும் கேடும் நிகழ்ந்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாகவோ சடங்குகளைப் பின்பற்றுவது தொடர்ந்து வருகின்றது. இச்சடங்கு முறைகளைப் பின்பற்றுவது தொடர்ந்து வருகின்றது. இச்சடங்கு முறைகளைத் தவறாமல் பின்பற்றுவதில் கிராமப் புறங்களில் வாழும் மக்கள் முதன்மையாய் உள்ளனர் என்பதை,

"பழமையாய் வாழ்ந்து வரும் வட்டார மக்கள் வாழ்வில் சடங்குகளும் சம்பிரதாயங்களும் மேலோங்கி நிற்கின்றன. நாடோடிகளாய் ஊர் சுற்றித்திரியும் மக்களிடம் கூடச் சடங்குமுறைகளைக் காணமுடியும். வாழ்க்கைத் தேவை அல்லது அச்சத்தின் அடிப்படையில் தோன்றியவை இச்சடங்குளாகும்".[5] என்ற கருத்து வலுசேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. எனவே சடங்குகள் மனித மனத்திற்கு அமைதியை ஏற்படுத்தும் வகையில் சமூகத்தால் ஏற்படுத்தப்பட்டவை என்பது தெளிவாகின்றது.

இச்சடங்குகளை இரண்டாகப் பகுக்கலாம் அவை,

1. பிறப்பிலிருந்து இறப்பு வரை செய்யப்படுபவை
2. இறப்பிற்கு பின் செய்யப்படுபவை.

என்பதாகும். பிறப்பிலிருந்து இறப்பு வரை நிகழ்த்தப்படும் சடங்குகளில் பெண்ணுக்கு உரித்தான சடங்குகளிலேயே சமூகம் மிகுந்த கவன்ம் கொள்கின்றது எனலாம். குறிப்பாக, ஒரு பெண் பருவமடைந்த பின் நிகழ்த்தப்படும் சடங்கு முக்கிய பங்கு வகுக்கின்றது. அதிலும் தீட்டுக் கழித்தல் சடங்கு அனைவரையும் நிகழ்த்தப்படும் ஒன்றாக உள்ளது. இதனை வலியுறுத்தும் விதமாக.

"பெண் குழந்தைகள் பருவமடைந்தால் செய்யப்படும் சடங்கு பூப்பு, பூம்பு நீராட்டு என அழைக்கப்படுகின்றது. பெண் பருவமடைந்ததும் தாய்மாமனை பச்சை ஓலையில் வீட்டுக்கருகில் குடிசை அமைக்கச் சொல்லி தனியே தங்க வைப்பர். தாய்மாமன் சீர்வரிசைப் பொருட்களோடு பெண்ணுக்குத் தேவையான பொருட்களைப் பரிசளிப்பர். பெண்ணுக்குத் தீட்டு சரியானதும் ஏழாம் நாள் (அ) ஒன்பதாம் நாள் குளிக்கச் செய்து புத்தாண்டை அணிவித்து, சரியான நேரத்திற்குள் வீட்டிற்குள் அழைப்பர்.[6] என்றச் குறிப்பு அமைந்துள்ளது. இச்சடங்கு இந்நூற்றாண்டு வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகப் பின்பற்றப்பட்டு வரும் நிலையை ஆண்டாள் பிரியதர்ஷினி தனது "தகனம்" சிறுகதையில் பதிவு செய்துள்ளார். இச்சிறுகதையில், முனியம்மாவுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் உண்டு. பெரியவன் சின்னராசு தோளுக்கு மேல் வளர்ந்த மகனாக இருந்தாலும் ஒன்றும் வேலைக்குச் சென்று சம்பாதிக்கவில்லை என்ற வருத்தத்தில் இருக்கின்றாள். அச்சமயத்தில் மகள் ராணி பூப்பெய்திவிட்டார், இதனைக் கேட்டவுடன் முனியம்மா வரும் செலவுகளை எண்ணி வருத்தமடைகின்றாள். இதனை,

*“சடங்குன்னு பத்திரிக்கை வச்சாலாவாது …….. நாலு பேரு வரப் போக இருப்பாக ………. இனிம ……….. ராணி கல்யாணத்துக்குப் பண்ட பாத்திரம்னு சேக்கனுமே ………. சடங்கு கழிச்சாத்தான் ரெண்டு சருவச்சட்டி நாலு புடவை பத்து நூறு மெய்ப்பணன்னு வந்து சேரும். செலவுக்கு பயந்து திரட்டு சுத்த வேணான்னா ஒண்ணுமத்துதான் போவும் ……… பொட்டைன்னாலே செலவாளித்தான் ………… சடங்கு விசேசம்னு ஒண்ணோடி ஒண்ணா வருந்தேன்”.* ***(ஆண்.பிரி.சிறு.ப. 896)***

*என்ற வரிகள் உணர்த்துகின்றன. “குடும்பம்” வறுமையில் வாடினாலும் கூட சடங்கு என்று வந்துவிட்டால் கடனை வாங்கியாவது ஊர் முழுவதும் அழைப்பு விடுத்து அனைவரும் புகழ்ந்து பாராட்டும் விதமாக அனைத்து பொருட்களையும் வாங்கி வந்து சடங்கினை செய்வார்கள். அவ்வாறு செய்வது தனது குடும்பப் பெருமையையும் அந்தஸ்த்தையும் சுய கௌரவத்தையும் உயர்த்துவதாக கருதினார்கள். அதனால் சமுதாயத்தில் பூப்பெய்திய சடங்கு சிறப்பாக செய்யப்படுகிறதென்பதை,“உலக்கைக்கு அந்தப் பக்கத்திலிருந்த ராணியிடம் சொன்னார்கள். புது ஜவுளி, மாலை, பூவு, பழம், பலகாரம், பிரியாணி, நோட்டீஸ்ன்னு செலவு முழங்கடிச்சிடும். ஒட்ட ஒட்ட கணக்குப் பார்த்தாக்கூட ரெண்டாயிரம் கிட்ட வந்திடும். பரவாயில்ல ……… வர்ற மெய்ப் பணத்தில் சமாளிச்சுடலாம். சுத்துபத்துல இருக்கிற அம்பது ஊட்டு ஜனங்களையும் அழைக்கோணும்”.* ***(ஆண்.பிரி.சிறு.ப. 897)***

*என்று முனியம்மாவும் இருசப்பனும் பேசிக்கொள்வதிலிருந்து அறியமுடிகின்றது. மேலும் சடங்கு செய்வது என்பது சாதாரணமாக எண்ணுவது கிடையாது. ஏனெனில் சடங்கு செய்வதற்கான முறையான பொருட்களை வாங்கி வருவதோடு செய்கின்ற முறையையும் சரியாக செய்தால்தான் அப்பெண்ணிற்கும் குடும்பத்திற்கும் நல்லது என நம்பி காலங்காலமாக செய்து வருகின்றனர் என்பதும், இச்சடங்கினைச் செய்கின்ற பொழுது இயல்பாகவே அப்பெண்ணிற்கு பருவம் அடைந்ததற்கான நாணமும் வெட்கமும் வந்துவிடுமென்பதை,*

*“ரவிக்கை, பாசிமணி, கண்ணாடி, வளையல், ஸ்டிக்கர் பொட்டு, கண் மை, மாலையென்று சகலமும் போட்டு உட்கார வைத்த போது அம்சமாய்த்தான் இருந்தது. புதிதாய் ஏதோ சோபை ராணியின் முகத்தில் கூடவே யாரையும் கண் நிமிர்ந்து பார்க்க விடாமம் வெட்கம்”.* ***(ஆண்.பிரி.சிறு.ப. 900)***

*என்ற வரிகளின் வழி அறியமுடிகின்றது. இங்கு சமூகத்தில் பெண் குழந்தைகள் பருவமடையும் நிகழ்வு மிகுந்த இன்பகரமான நிகழ்வாக உணரப்படுவதால் அதனை அம்மக்கள் ஊர் முழுக்கத் தெரியப்படுத்துகின்றனர் என்பது புலனாகின்றது. மேலும், ஊர் மக்களின் கண்ணேறு விழாமல் இருப்பதற்காகத் தட்டில் பருவமடைந்த பெண்ணிற்கு ஆலம் சுற்றீத் தெருவில் ஊற்றூவதும் இன்று வரை மக்கள் கடைபிடித்து வரும் சடங்கு முறை என்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.*

***இறப்பு சடங்குகளின் நோக்கும் போக்கும்***

*மனிதன் இறந்த பிறகு செய்யப்படும் சடங்குகளில் கொல்லிப் போடுதலும், கருமாதிச் சடங்கும் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. கொல்லிப்படுதல் என்பது இறந்தவரின் “ஆண்”*

வாரிசுக்கு மட்டுமே உரிமை உடையதாக காலங்காலமாக கடைப்பிடித்து வரும் சடங்காகும். ஆண் வாரிசு இல்லாதவர்களுக்கு உறவுகளில் உள்ள வேறொருவர் அல்லது குறிப்பாக மகன் உறவுமுறைகளில் உள்ளவர்கள் கொல்லிப்போடுதலும், அதன் அடையாளமாக தலைமுடி, மீசைமுடி ஆகியவற்றை மழித்துக்கொள்வதும் இன்று வரை நடைமுறையில் கடைப்பிடித்து வரும் சடங்குகளில் ஒன்றாகும் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இச்சடங்குகளைச் செய்வதற்குக்கூட மகன்கள் தற்காலத்தில் போட்டிப் போட்டுக் கொண்டு செய்ய மறுக்கின்றார்கள் என்பதை ஆசிரியர் மிகத் தெளிவாக பதிவு செய்துக் காட்டியிருப்பதை "தாலிக்கொடியும் தொப்புள் கொடியும்" என்ற சிறுகதையின் வழி காணலாம்.

*"ப்ச ..... என்னய்யா இது? சுண்டைக்காய் சமாச்சாரம், கம்ப்யூட்டர் காலம்யா இது, இப்பப்போயி மழிக்கணும்னுட்டு ……… எவ்வளவோ சம்பிரதாயம் மாறியாச்சு. கல்யாணத்துக்கு முன்னாடியே ரிஸப்ஷன் வச்சுக்கறோம்... கொஞ்ச நாளையல சாந்திமுகூர்த்தம் எல்லாம் முடிச்சுட்டுத்தான் கல்யாணம்னு வந்திடும். இழவுக்கு எப்படியிருந்தா என்னய்யா?..* ***(ஆண். பிரி.சிறு. ப.555)***

*என்று கத்துகின்றார். ஜானகி அவருக்கு விருப்பம் இல்லை என்றாள் இரண்டாவது அண்ணனைக் கேட்கலாமே என்கிறாள். இரண்டாவது அண்ணி, அண்ணனை பேசவே விடவில்லை. நான்கு அண்ணன்களும் போட்டிப் போடுவதைப் பார்த்த ஜானகி அப்பாவிற்காக முகத்தில் உள்ள முடியையும், தலைமுடியையும் வழிக்கத் தவறியவர்கள் வீட்டிற்கு வந்துவிட்டு சென்ற மூன்றாவது மனிதர்களாகவே இருக்கட்டும்.*

*"அப்பா அனாதை இல்ல, கொள்ளிப்போட ஜானிகின்னு ஒரு புத்திரனும், ஆஸ்திக்குனு நாலு பொண்ணுங்களையும் பெத்தவராயிருக்கட்டும். நா கொள்ளி போடறேன். அப்பா ஆத்மா நிச்சயமா சொர்க்கத்துக்குப் போவும். பெத்த கடமையைக் கழிக்கறதுக்காகப் போடவில்லை. ஆத்மார்த்தமா பண்றேன். என் அப்பாவோட ஆத்மா நல்ல நிலையிலே அமைதி அடையணும்னு பிரார்த்தனை பண்ணிப் போடறேன்".* ***(ஆண். பிரி.சிறு. ப.559)***

*என்று அழுது புலம்புகின்றார். ஒரு விவேகத்துடன் செயல்படத் துவங்கினாள். மகள் என்ற பந்தம் கொடுத்தவருக்கு நெய் பந்தம் புடிக்கிறது என்னோட கடமை. எனக்குக் கிடைத்த பாக்கியம் எனக் கூறியவள் வேகமாய் வெளியில் வந்து தீச்சட்டியைக் கையில் தூக்கிக்கொண்டு.*

*"அந்த ஜானகி இராமன்கிட்ட தாலிக்கொடி வாங்கின கடமைக்காக தீக்குளிச்சா. இந்த ஜனகி தொப்புள் கொடியில் தொடங்கின உறவுக்காக தீப்பந்தம் புடிக்கிறேன். ம் எட்டி நடங்க மூங்கில் பல்லக்கை ஒருபக்கம் தோள் கொடுத்துத் தூக்கி நடக்க ஆரம்பித்தாள். (ஆண்.பிரி.சிறு.ப.560) என்று முடிக்கின்றார்.*

இங்கு தற்காலத்தில் பல பிள்ளைகள் தனது பெற்றோருக்கு செய்ய வேண்டிய இறப்பு சடங்கினை ஆத்மப் பூர்வமாக செய்யும் நோக்குடையவர்களாக இல்லாமல் கடைமக்காகவும், பலரின் வற்புறுத்தலுக்காகவும் முறைப்படி செய்யாது,"சடங்கு" என்று ஒன்று செய்தால் போதும், எப்படி செய்தாலென்ன என்ற போக்குடையவர்களாகவே வாழ்கின்றனர் என்பதை

*ஆசிரியர் இக்கதையின் வழி மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியிருப்பது புலனாகின்றது. மேலும், கொல்லிப் போடுவதற்காகவ""ஆண்'' குழந்தை வேண்டுமென்று காலங்காலமாக தவமிருந்து வாழும் மக்கள் சமூகத்தில் இப்படி ஈமச் சடங்கினைச் செய்வதற்கு கூட போட்டியிட்டும், சுய நலத்துடனும் வாழும் பிள்ளைகளும் சமுதாயத்தில் வாழத்தான் செய்கின்றார்கள் என்ற போக்கினை ஆசிரியர் இக்கதையின் வழி தெளிவுபடுத்தியிருப்பது புலனாகின்றது .*

*வாழ்வியல் தத்துவம் வாழ்க்கை ஒரு சக்கரம் போன்றது. இச்சக்கரம் சுழலும் போது மேலே இருப்பது கீழேயும், கீழே இருப்பது மேலேயும் தலைகீழாக மாறி சுழன்று வரும். அதுபோல்தான் மனிதனின் வாழ்க்கையுமாகும். ஏழை பணக்காரனாக மாறுவதும் பணக்காரன் ஏழையாக மாறுவதும் உலகத்து இயற்கை. அதுபோலவே தன்னை ஒருவர் உதாசினப்படுத்தினால் பின்னர் அவரும் இந் நிலைக்கு வரமாட்டார் என்பது நிச்சயமற்றது. இத்தகைய வாழ்வியல் தத்துவத்தை ஆண்டாள் பிரியதர்ஷினி ''வெள்ளையம்மா'' என்ற சிறுகதையில் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பார்.*

*வெள்ளைம்மாவிற்கு தொழுநோய் என்ற காரணத்தினால் அந்நோயைக் காரணமாகக் கூறி, வெள்ளையம்மாளை விட்டு அவளது கணவன் பிரிந்து விடுகின்றான். வெள்ளையம்மாள் தொழுநோய் குழந்தைகளுக்கு உதவி செய்து அவர்களுடனே அன்னை தெரசா போன்று வாழ்ந்து வருகின்றாள். இந்நோய் அவளது கணவனுக்கும் வந்துவிடுகின்றது. பல ஆண்டுகள் கழித்து அவனது இரண்டாவது மனைவி நோய் வந்த காரணத்தினால் விரட்டி விடுகின்றாள். பசிக்கு உணவின்றி, அலைந்து, திரிந்து தனது முதல் மனைவி வெள்ளையம்மாவையும் தனது மகளையும் தேடி வருகின்றான். இதனைப் பார்த்த வெள்ளையம்மா,*

*''இதுதான் விதியா? இதுதான் கடவுளின் கணக்கா? தப்புக் கணக்கை நேர்செய்து காட்டுகின்ற விடையா? ம்? தெய்வம் நின்று கொல்லும். இருபது வருஷம் நின்று நிதானமாய்க் கொல்லுமா? நான் வடித்த கண்ணீர் இவனின் உருவத்தைக் களிமண்ணாய் கரைக்கிறதே. நொறுங்கிய என் மனசு, இவனின் நிம்மதியை நொறுக்கிவிட்டதே. என் கழுத்தில் கை வைத்துத் தள்ளினவன் இப்போது என்னை வணங்குகின்றானே.* ***(ஆண். பிரி.சிறு. ப.507)****என்று எண்ணிப் பார்க்கின்றாள், இதிலிருந்து ஆசிரியர் மனித வாழ்க்கையில் நன்மையும் தீமையும் நிலையில்லாதது என்றும், அவரவர் செய்கின்ற வினைகளுக்கு ஏற்றார்போல் பாவமும் புண்ணியமும் கிடைக்கிமென்கிற வாழ்வியல் தத்துவத்தை வெளிப்படுத்தியிருப்பதை அறியமுடிகின்றது.*

***முடிவுரை***

*''வாழ்வியல் குறித்த நோக்கும் போக்கும்'' என்னும் இக்கட்டுரையில், வாழ்வியல் என்பதற்கான வரையறை, அகராதிகள் தரும் விளக்கங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. சடங்குகள் குறித்த விளக்கம் மனித வாழ்க்கையில் சடங்குகளைக் காலங்காலமாக செய்து வருவதற்குக் காரணம், சடங்குகளின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையே ஆகும். அச்சடங்கினை முறையாக செய்யாமல் தவறிவிட்டுவிட்டால். தனக்கும் தன் குடும்பத்திற்கும்*

ஏதேனும் ஒரு வகையில் தீங்கு ஏற்படும் என்று நம்பி வருகின்றனர் என்பதை அறிய முடிகின்றது. மனிதனின் வாழ்க்கையில் பிறப்பில் தொடங்கிய சடங்குகள் இறப்பு வரை தொடர்கின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இறப்பு சடங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாக மக்கள் நம்பி வருவது, இறந்த பின் கொல்லிப் போடுவதற்கு ஆண் குழந்தைகள் வேண்டுமென்பதேயாகும். ஆண் மகன் கொல்லி வைத்தால் சொர்க்கம் கிட்டுமென்றும் இல்லையென்றும் நரகலோகம்தான் செல்ல இயலுமென்றும் நம்பிக்கைச் சார்ந்த போக்கு தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளதை அவரது சிறுகதைகளின் வழி இக்கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. சு. சக்திவேல் “கவிதாசன் படைப்புகளில் வாழ்வியல் சிந்தனைகள்”, ப.11.
2. அ.ஜெயக்குமார், “உலக நாகரிகங்களும் தமிழர் பெருமையும்”, ப.10.
3. தொல்காப்பியம், “மரபியல்”, நூ. 365.
4. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல், ப.189.
5. ப.வெ.பாலசுப்பிரமணியன், “கொங்கு வட்டார நாவல்கள் – ஓர் ஆய்வு”, ப.74.
6. க.முருகேசன், சு.குமரன், க.சதாசிவம் (பதிப்பாசிரியர்கள்), “தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும்”, மாற்றங்களும், தொகுதி – 1, ப.90.

**கலைச்சொற்கள்**

1. **நோக்கு -** நோக்கம், கண் பார்வை, அழகு, கருத்து, வேற்றுமை உருபு ஏற்றல், மெய் உயிர் இயைவு.
2. **போக்கு -** போங்கு, போகும் முறை, மாதிரி, வழி, நடை, மீட்சி, புகல், போகச்செய், ஓட்டு, கொடு, நீக்கு, விலக்கு இல்லாமல் செய்.
3. **சடங்கு -** என்ற சொல்லிற்குச் ‘சட்ட’ என்ற உரிச்சொல், வேர்ச்சொல் ஆகும். ‘சட்ட’ – செவ்விதான ஒழுங்கு முறையான.

**துணை நூற்பட்டியல்**


1. **ஆண்டாள் பிரியதர்ஷினி** : **சிறுகதைத் தொகுப்புகள்** ஏகம் பதிப்பகம், சென்னை, 2009.

2. **சக்திவேல், சு** : **கவிதாசன் படைப்புகளில் வாழ்வியல் சிந்தனைகள்,** முனைவர் பட்ட ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர், 2013.

3. **தொல்காப்பியர்** : **தொல்காப்பியம்,** திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1982.

4. ***பக்தவத்சல பாரதி*** : ***தமிழர் மானடவியல்,***
*அடையாளம்,*
*புத்தாநத்தம்,*
*இரண்டாம் பதிப்பு, 2008.*

5. ***பாலசுப்பிரமணியன், ப.வெ.*** : ***கொங்கு வட்டார நாவல்கள் ஓர் ஆய்வு***
*முனைவர் பட்ட ஆய்வேடு,*
*பாரதியார் பல்கலைக் கழகம்,*
*கோயம்புத்தூர், 2013.*

6. ***முருகேசன், க.***
***குமரன், சு.***
***சதாசிவம், ஆ,***
***(ப.ஆ)*** : ***தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்,***
*தொகுதி – 1, 11,*
*செம்மூதாய் பதிப்பகம்,*
*சென்னை, 2013.*

7. ***ஜெயக்குமார், அ.*** : ***உலக நாகரிகங்களும் தமிழர் பெருமையும்***
***மருதம் பதிப்பகம்,***
***சென்னை,***
***முதற்பதிப்பு, 1994.***